பாப்தாதாவின் விசேஷமான பிரவேசம் மற்றும் ஞானத்தின் அடித்தளம் - தூய்மை

இன்று அன்புக்கடல் பாப்தாதா தனது அன்பின் சொரூபமான குழந்தைகளுடன் சந்திப்பு நிகழ்த்து வதற்காக வந்துள்ளார். அனைத்து குழந்தைகளுக்குள் பாபாவின் அன்பு நிறைந்துள்ளது. அன்பு அனைத்து குழந்தைகளை தூரத்திலிருந்து நெருக்கத்திற்கு அழைத்து வந்துள்ளது. பக்த ஆத்மாவாக இருந்தபோது பாபாவிற்கு எத்தனை தூரமாக இருந்தோம், ஆகையால் நாலா புறமும் தேடிக்கொண்டிருந்தீர்கள் மற்றும் இப்பொழுது அவ்வளவு நெருக்கத்தில் இருக்கின்றீர் கள், ஒவ்வொரு குழந்தைகளும் நம்பிக்கையும் ஜொலிப்புடனும் எனது பாபா என்னுடன் இருக்கின்றார் என்று கூறுகின்றீர்கள். கூட இருக்கின்றாரா அல்லது தேடவேண்டியதாக உள்ளதா - இந்தப்பக்கமா, அந்தப் பக்கமா? எவ்வளவு சமீபம் ஆகிவிட்டது. எனவே மிகவும் நெருக்கமாகிவிட்டீர்கள்! பரமாத்மா எங்கே? என்று யாராவது கேட்கலாம். அப்பொழுது நீங்கள் என்ன சொல்வீர்கள்? என்னுடன் இருக்கின்றார். இப்போது தந்தையால் கூட நான் இல்லாமல் வாழ முடியாது என்று மகிழ்ச்சியாக சொல்கிறீர்கள். எனவே நீங்கள் மிகவும் நெருக்கமாகி விட்டீர்கள், உங்கள் துணைவராகிவிட்டார். உங்களாலும் தந்தை இல்லாமல் ஒரு நொடிப் பொழுது கூட இருக்க முடியாது. ஆனால் மாயை வரும்போது உங்களுடன் இருப்பவர் யார்? அந்த நேரத்தில் தந்தை உங்களுடன் இருந்தால் மாயை வர முடியுமா? ஆனால் விருப்பத்திற்கு மாறாக, குழந்தைகள் சில சமயங்களில் தந்தையுடன் கண்ணாம்பூச்சி விளையாடுகிறார்கள். குழந்தைகள் ஒரு பக்கம் என்னுடைய பாபா, என்னுடைய பாபா என்று உரைக்கின்றார்கள், இன்னொரு பக்கம் பாபாவை ஒதுக்கியும் விடுகின்றார்கள், குழந்தை களின் இதுபோன்ற விளையாட்டை பாப்தாதாவும் பார்த்துக் கொண்டே இருக்கிறார். ஒரு வேளை இப்போது இங்கே இப்படி ஒதுக்கினால், உங்களைப் பார்க்க முடியாது அல்லவா? எனவே, நீங்களும் மாயைப் போன்று இப்படி நடந்துகொள்கிறீர்கள். தந்தையைக் காணும் பார்வை அடைத்துவிடுகின்றது, மாயைப் பார்க்கும் பார்வை திறந்துவிடுகின்றது.அதனால் நீங்கள் கண்ணாம்பூச்சி விளையாட்டு சில நேரங்களில் விளையாடுகிறீர்களா? இருந்தபோதிலும், தந்தை குழந்தைகளை கருணை யுடன், மாயாவிலிருந்து உங்களை எப்படியாவது விலக்கி விடுகின்றார். அது உங்களை மயக்க மடையச் செய்கிறது, ஆனால் தந்தை உங்களை மூர்ச்சை யிலிருந்து விழிப்படையச் செய் கின்றார். ஏனெனில் நீங்கள் என்னுடையவர்கள். மூடிய கண்கள் நினைவின் மந்திரத்தால் திறந்துவிடுகிறது.

பாப்தாதா கேட்கிறார் அனைவரும் அன்பில் எத்தனை சதவீதம்? 100 சதவிகிதத்தைக் காட்டிலும் அதிகம் என்று எல்லோரும் சொல்கிறார்கள். பன்மடங்கு அன்பு உள்ளது என்று சொல்கிறீர்கள், இல்லையா? நல்லது, யாருக்கு பன்மடங்கைக்காட்டிலும் குறைவாக கோடி, லட்சம், ஆயிரம், நூறு மடங்காக உள்ளதோ அவர்கள் கையை உயர்த்துங்கள். (யாரும் எழுப்பவில்லை) நல்லது, அனைவரும் பக்காவாக உள்ளார்கள்! பாப்தாதா பிறகு இன்னொரு கேள்வி கேட்பார்! பிறகு மாறிவிடக்கூடாது. நல்லது, பலமடங்கு அன்பு இருக்கிறது என்ற

மகிழ்ச்சியான செய்தியை கூறினீர்கள்.

அன்புக்கு கைமாறு என்ன? என்று இப்போது பாபா கேட்கிறார் (சமமாக ஆவது) எனவே நீங்கள் சமமாகிவிட்டீர்களா? (இல்லை.) பிறகு பல மில்லியன் மடங்கைக் காட்டிலும் குறைவாகி விட்டது. முழுமையடைய இன்னும் சிறிது காலம் இருக்கிறது, எனவே ஆகிவிடு வோம் என்று நீங்கள் அனைவரும் சொல்வீர்களா? ஆனால் அன்பிற்காக உயிரையும் தியாகம் செய்ய வேண்டும் என்று அன்பானவர்கள் சொன்னால், உயிரைக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். பாப்தாதா உயிரை எடுப்பதில்லை, ஏனென்றால் உயிர் இருந்தால் தான் சேவை செய்ய முடியும். ஆனால் பாப்தாதாவுக்கு ஒரு விஷயத்தைப் பற்றி சிறிது நேரம் ஆச்சரியப்பட வேண்டியதாக உள்ளது.. ஆச்சரியப்பட கூடாது, என்று உங்களுக்கும் சொல்கிறார்கள், ஆனால் பாப்தாதா ஆச்சரியப்பட வேண்டியதாக உள்ளது, அவ்வாறு

தனது பாகத்தை நடிக்கின்றார். உங்கள் உயிரை தியாகம் செய்வது என்பதை விடுங்கள், ஆனால் அன்பின் அடையாளம் பலியாவதாகும், அதாவது ஒருவர் சொல்வதை மற்றவர் செய்வதாகும். எனவே ஒரு விசயத்தில் பலியாவதை பார்க்க தந்தை விரும்புகிறார். விஷயங்கள் பல உள்ளன, ஆனால் தந்தை அவற்றை எல்லாம் பார்க்கவில்லை, ஒரு விஷயத்தில் மட்டுமே பலி ஆக வேண்டும். அதற்காக கை உயர்த்துகிறார்கள், உறுதிமொழியும் கூட செய்கிறார்கள், ஆனால், வாக்குறுதி கொடுத்த பிறகும் செய்கிறார்கள் அது என்ன?, தந்தையை விட்டு விலகுவதற்கான மூலசம்ஸ்காரம் அல்லது மூல பலவீனம் என்ன என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள் கிறார்கள். ஒவ்வொருவரும் தனது மூல பலவீனம் என்ன என்பதை தெரிந்து உள்ளீர்கள் தானே? அப்படியென்றால் அதை பலகீனக் குறைவு என்று தெரிந்தும் நீங்கள் ஏன் பலி செய்வதில்லை? 63 பிறவிகளுக்கு கூடவே வருவதால், நீங்கள் அதனை விரும்புகிறீர்கள்?

எது அன்பானவருக்கு பிடித்தமானதோ, அதைச் செய்வது தான் அன்பின் அர்த்தம் ஆகும். ஒருவேளை அன்பு செலுத்துபவர் ஒரு விஷயம் சொல்கின்றார், ஆனால், மற்றொருவர் வேறு ஒன்றை செய்கின்றார் என்றால் என்ன ஆகும்? அன்பு வருமா அல்லது சண்டை வருமா? அந்த நேரத்தில், நன்றாகத் தடியை கொண்டு ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வதை அன்பு என்று சொல்வார்களா? தந்தைக்கு என்ன பிடிக்கும்? சமம் ஆகுவதில் சில விஷயங்கள் உள்ளன என்று பாப்தாதா சொல்கின்றார்கள். பிரம்மா பாபாவின் விசேஷத் தன்மைகளை பாருங்கள், மேலும், பிரம்மா பாபாவிற்கு சமமாகத் தான் ஆக வேண்டும் என்றால் எவ்வளவு பெரிய பட்டியல் உள்ளது! அதற்காக கூட அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. ஓர் இரு விஷயங்கள் குறைவாக இருந்தாலும் பரவாயில்லை என்று பாப்தாதா கூறுகின்றார்கள். ஆனால், எது மூல அஸ்திவாரமோ, எது பிரம்மா பாபா மற்றும் ஞானத்திற்கான ஆதாரமோ, அது என்ன? பிரம்மா பாபா, சிவ பாபாவினுடைய விசேஷமான விருப்பம் என்ன? (தூய்மை, உள்நோக்குமுகம், நிச்சய புத்தி, உண்மை, சுத்தம்) உண்மையில் அஸ்திவாரம் தூய்மை ஆகும். ஆனால், தூய்மையின் அர்த்தம் மிகவும் ஆழமானது. தூய்மை எங்கு இருக்குமோ, அங்கு நம்பிக்கை, உண்மை, சுத்தம் ஆகிய இவை அனைத்தும் வந்துவிடுகின்றன. ஆனால், தூய்மையினுடைய

ஆழமான அர்த்தம், தூய்மையினுடைய ஆழமான இரகசியம் இப்பொழுது புத்தியில் முழுமையாக, தெளிவாக இல்லை என்பதை பாப்தாதா பார்த்தார்கள். வீணான எண்ணம் எழுவது மற்றும் பிறருக்குள் எழச்செய்வது, தனக்குள்ளும் வருகிறது மற்றும் பிறருக்கு வருவதற்கும் நிமித்தமாக ஆகின்றார்கள், எனில், வீணான எண்ணம் எழுவது என்பது தூய்மையா என்ன? பிறகு, எண்ணத்தினுடைய தூய்மையின் இரகசியத்தை அனை வரும் நடைமுறையில் கொண்டு வர வேண்டும் அல்லவா. ஐந்து விகாரங்களும், அது காமம் ஆகட்டும், மோகம் ஆகட்டும், அனைத்தையும் விட முதல் எண்ணில் இருப்பது காமம் மற்றும் இறுதியில் இருப்பது மோகம் என்று பார்க்கப்படுகிறது. ஆனால், எந்த ஒரு விகாரம் வரும்பொழுதும் முதலில் எண்ணத்தில் வருகிறது. வீணான எண்ணம் கோபத்தையும் வரவழைக்கிறது, காமம் அதாவது எந்த ஒரு ஆத்மாவின் மீதும் ஒருவேளை வீணான பார்வையும் செல்கிறது எனில், அந்த சமயம் தூய்மை உள்ளது என்று ஏற்றுக்கொள்ளப்படுமா?

இந்த வீணான எண்ணத்தை தந்தையின் அன்பிற்காக ஏன் பலி செய்யக்கூடாது? செய்ய முடியுமா? (முடியும்). முடியும் என்று சொல்வது மிகவும் சுலபம். ஆனால், பாப்தாதா விடமோ அனைவருடைய சார்ட் உள்ளது அல்லவா. பெரும்பான்மையினரிடம் இப்பொழுது வரை பஞ்ச விகாரங்களினுடைய வீண் எண்ணம் வருகின்றது. அது எந்த விகாரமாக இருந்தாலும், இது ஏன், இது என்ன, அப்படி இருக்கக் கூடாது, இப்படி இருக்க வேண்டும்..... சில பொதுவான விஷயங் களை பாப்தாதா சொல்கின்றார்கள் - ஞானி ஆத்மாக்களிடத்தில் இருந்தால், தன்னுடைய குணத்தினுடைய, தன்னுடைய விசேஷத் தன்மையினுடைய அபிமானம் உள்ளது அல்லது எந்த அளவு முன்னேறுகின்றார்களோ, அந்த அளவு தன்னுடைய ஏதாவது ஒரு விஷயத்தில் குறை உள்ளதைப் பார்த்து, குறை என்பது தன்னுடைய முயற்சியில் இருப்பதை அல்ல, ஆனால், பெயரில், மதிப்பில், பெருமையில், கேட்பதில், முன்னால் வருவதில், சென்டர் இன் சார்ஜ் ஆக்குவதில், சேவையில், விசேஷ பாகம் கொடுப்பதில் - இதில் குறை இருந்தால், இந்த வீணான எண்ணம் கூட விசேஷ ஞானி ஆத்மாக்களுக்கு மிகுந்த நஷ்டத்தை ஏற்படுத்துகின்றது.

தற்சமயம் இந்த இரண்டும் தான் விசேஷமாக வீண் எண்ணங்கள் வருவதற்கான ஆதாரமாக உள்ளன. நீங்கள் எப்பொழுது சேவைக்கு செல்கின்றீர்களோ, அப்பொழுது ஒரு நாளிற்கான தினச்சரியத்தை நோட் செய்ய வேண்டும் மற்றும் சோதனை செய்ய வேண்டும் - ஒரு நாளில் இந்த இரண்டில் இருந்து, அது அபிமானமோ அல்லது இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால் அவமானம் என்று சொல்லலாம் - என்னை மட்டும் ஏன் குறைவாக மதிப்பிடப்படுகிறது, எனக்கும் இந்தப் பதவி வேண்டும், என்னையும் முன்னால் வைக்க வேண்டும், இதை அவமானமாக நினைக்கின்றீர்கள் அல்லவா. எனவே, இந்த இரண்டு விஷயங் கள் அதாவது அபிமானம் மற்றும் அவமானம் - இந்த இரண்டு தான் தற்சமயத்தில் வீண் எண்ணங்கள் வருவதற்கான காரணம் ஆகும். இந்த இரண்டையும் ஒருவேளை பலி செய்து விட்டீர்கள் என்றால் தந்தைக்கு சமமாக ஆகுவது ஒன்றும் கடின மானது அல்ல. பலி செய்வதற்கான சக்தி உள்ளதா? நல்லது, எவ்வளவு சமயத்தில் பலி செய்வீர்கள்? இப்பொழுது நவம்பர் மாதம் அல்லவா, புது வருடம் வருவதற்குள் இரண்டு மாதங்கள் ஆகிவிடும் அல்லவா! புதிய வருடத்தில் புதிய கணக்கு வைக்கப்படுகிறது, எனவே,

ஒவ்வொருவரும் அது டீச்சரோ அல்லது மாணவரோ அல்லது மகாரதியோ அல்லது காலாட் படையினரோ, இது மகா ரதிகளுக் காகத்தான், நாங்களோ சிறியவர்கள் என்பது கிடையாது. இராஜ்ய பாக்கியத்தை பெறக்கூடிய சமயத்தில் நான் சிறியவர் என்று எவரும் சொல்ல மாட்டார்கள், அந்த சமயத்திலோ, இரண்டாவது நாராயணராக என்னை ஆக்குங்கள் என்று சொல்வார்கள்.

எனவே, ஒவ்வொருவரும் தன்னுடைய சமாச்சாரத்தை இரண்டு வார்த்தைகளில் மட்டும் கொடுக்க வேண்டும் மற்றும் அந்த தபாலின் மேலே விசேஷமாக "மனோநிலைக்கான கணக்கு வழக்கு" என்று எழுத வேண்டும். அப்பொழுது அந்த தபால் தனியாக வைக்கப் பட்டுவிடும். மேலும், வீணான எண்ணங்கள் எத்தனை சதவிகிதம் பலி செய்யப்பட்டுள்ளது என்பதை உள்ளுக்குள் எழுத வேண்டும். 50 சதவிகிதமா அல்லது 100 சதவிகிதம் பலியாகி உள்ளதா? ஒரு வரி மட்டும் எழுதினால் போதும், நீளமாக எழுதக்கூடாது. யார் நீளமாக எழுது வார்களோ, அவர்களுடையதை முதலிலேயே கிழித்துவிடுவார்கள். எனவே, தயாராக இருக்கின்றீர்களா? சத்தமாகச் சொல்லுங்கள் - சரியா அல்லது முடியாதா? இதற்கு தைரியம் வேண்டும், சமயமும் வேண்டும் என்று யார் நினைக்கின்றீர்களோ, அவர்கள் இப்பொழுதே கையை உயர்த்துங்கள். உங்களுக்கு முதலிலேயே அனுமதி வழங்கப்படும். யாராவது உள்ளீர்களா அல்லது முயற்சியோ அதிகமாக செய்துவிட்டேன் ஆனால் முடியவில்லை என்று பின்னால் எழுது வீர்களா. இப்படி எழுத மாட்டீர்கள் தானே? உறுதியாகவா? நல்லது.

அன்பு மதுபன் வரை அழைத்து வந்து விடுகிறது என்பதை பாப்தாதா பார்த்தார்கள். ஆனால், இதே அன்பினால் எங்கு வரை செல்ல வேண்டும்? தந்தைக்கு சமம் ஆக வேண்டும் அல்லவா! எனவே, எவ்வாறு மதுவனத்திற்கு ஓடி ஓடி வருகின்றீர்கள் அல்லவா, என்னுடைய பெயரை கண்டிப்பாக எழுதுங்கள், என்னுடைய பெயரை கண்டிப்பாக எழுதுங்கள் என்று சொல்கின்றீர்கள் அல்லவா. மேலும், எழுதவில்லை என்றால் டீச்சரிடம் கொஞ்சம் கண்ணையும் காண்பிக் கின்றீர்கள் (சிறிது கோபப்படுகிறார்கள்). எவ்வாறு மதுவனத்திற்கு அன்போடு ஓடி வருகின்றீர் களோ, அதுபோலவே என்னுடைய பெயர் தந்தைக்கு சமம் ஆகுவதில் முதலில் இருக்க வேண்டும் என்று முயற்சி செய்யுங்கள். இதற்காக தூய்மையின் அஸ்திவாரத்தை உறுதியான தாக ஆக்குங்கள். பிரம்மா பாபா தூய்மையின் காரணத்தினாலேயே, ஒரு புதுமை தன்மையின் காரணத்தினாலேயே வசைகளை வாங்கினார். தூய்மை அஸ்திவாரம் ஆகும். மேலும், அஸ்திவாரமான பிரம்மச்சரிய விரதத்தை கடைபிடிப்பது ஒரு பொதுவான விஷயம். ஆனால், இப்பொழுது முன்னேறி இருக்கின்றீர்கள், இன்னும் குழந்தை பருவம் அல்ல, இப்பொழுது வானப் பிரஸ்த நிலைக்குச் செல்ல வேண்டும். நான் பிரம்மச்சாரியாக இருக்கிறேன், தூய்மை என்பதும் இருக்கிறது, அதில் மட்டும் குஷி அடைந்திட வேண்டாம். இப்போது உங்கள் பார்வை மற்றும் விருத்தியில் (உணர்வில்) தூய்மையை இன்னும் அதிகமாக அடிக்கோடிட்டுக் காட்டுங்கள், ஆனால் மூல அடித்தளமான உங்களது எண்ணங்களை தூய்மையாக்குங்கள், ஞான சொரூப மாக்குங்கள், சக்தியின் சொரூபமாக ஆக்குங்கள். சங்கல்பத் தில் அதிக பலவீனம் உள்ளது. என்ன செய்வது, செய்ய முடியாது, என்னவாயிற்று என்று தெரியவில்லை... இதுதான் தூய்மை யின் சக்தியா? என்ன செய்வது,

நடந்ததுவிட்டது, முடிந்து விட்டது, விரும்பவில்லை ஆனால்...? இவர்கள் எப்படிப்பட்ட ஆத்மா? பவித்திர ஆத்மா பேசுகிறதா அல்லது பலகீனமான ஆத்மா பேசுகிறதா? நீங்கள் திரிகாலதர்ஷி ஆத்மாக்கள். ஏன் மற்றும் என்ன என்று கூறுகிறீர்கள் எனில், பாப்தாதா அவர்களை மாணவர்கள் முன் அழைத்துச் செல்லுங்கள் என்கிறார், 84 பிறவிகளைப் பற்றி நமக்குத் தெரிந்த படங்களை அவர்களுக்கு விளக்குகிறீர்கள். இப்போது ஏன் என்ன எனக் கேட்கிறீர்கள், அறிந்தவர்கள் ஏன் என்ன என்று கேட்பார்களா? இதனால் தான் இப்படி நடக்கிறது என்பது அவருக்குத் தெரியும். மாயாவின் தாக்கத்தால் இந்தமாதிரி பதில் தானாகவே புத்திக்கு வருமா?. மகாராதியாக இருந்தாலும் சரி, காலாட் படையாக இருந்தாலும் சரி. ஒரு மகாராதியிடம் தவறு நடந்தாலும், அந்த நேரத்தில் அவர் ஒரு மகாராதி அல்ல, அவர் பிரபாவத்தில் (அடிமை) இருப்பவர், அடிமையானவர் எங்கேனும் அலைகளில் அலைக்கழிக்கப் படுகிறார் எனில், நீங்கள் மகாரதி என்ற வடிவத்தில் பார்க்கலாம்! ஆனால் அப்போது அவர் மகாராதி அல்ல, அடிமை. புரிந்ததா, புத்தாண்டில் என்ன செய்யவேண்டும்? வீணானவற்றை அழித்து புதிய கணக்கு. "சரிதானே? பக்காவா? அல்லது ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்வீர் களா, ஒருவேளை. காரணம் இருந்தால், புதிய திட்டத்தைச் சொல்வோம். இப்போது சொல்ல மாட்டேன், இப்போது சொன்னால், இன்னும் ஒரு சீசன் கடந்துவிடும் காரணம் அல்ல நிவாரணம், காரணம் அல்ல, பிரச்சனையின் வடிவம் அல்ல, சமாதான சொரூபம்.

இப்பொழுது இயற்கையும் சோர்வாகி விட்டது. இயற்கையிடம் சக்தியும் தீர்ந்து விட்டது. ஆகவே இயற்கையின் எஜமானராகிய ஆத்மாக்கள் உங்களிடம் இயற்கை புகார் செய்கின்றது இப்போது சீக்கிரமாக செய்யுங்கள். இப்போது தாமதிக்க வேண்டாம். நல்லது!

பாப்தாதாவும் தனது உடலையும் கவனிக்க வேண்டியதாக உள்ளது. நடந்தாலும் நடக்க வில்லை என்றாலும் நடத்த வேண்டியதுள்ளது. ஏனென்றால் தந்தைக்கு குழந்தைகள் மீது அன்பு இருக்கிறது. இவ்வளவு அன்புடன் ஆத்மாக்கள் வருகின்றார்கள், பாபா ஆத்மிக உரை யாடல் செய்யவில்லை எனில், அது எப்படி இருக்கும்? எனவே, இதை வலுக்கட்டாயமாக நடத்த வேண்டியது உள்ளது, நல்லது அனைவரும் சந்தோஷமா? பாபா கிடைத்துவிட்டார் - எனில் திருப்தி தானே?

நாலாபுறத்திலும் இருக்கும் பன்மடங்கு அன்பின் சொரூபமான ஆத்மாக்களுக்கு, எங்கும் சதா தன்னை நிர்விக்னமாக்க கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா பாபா மற்றும் தடைகளற்ற சேவையின் ஆர்வத்தில் மூழ்கியிருக்கும் ஆத்மாக்களுக்கு, சதா பாபாவின் அன்பில் பலியாக கூடிய அனைத்து ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே. நல்லது! அனைவருக்கும் மகிழ்ச்சி! நான் சந்திக்கவில்லை என்ற கோபம் எதுவும் இல்லைதானே இரகசியங்களை அறிந்தவர்கள் ஒருபொழுதும் கோபப்பட மாட்டார்கள்.

தாதிகளிடம்: பாருங்கள் ஆதி ரத்தினமாகிய உங்களை பார்க்கும் போது அனைவருக்கும் அன்புடன் கூடவே சுத்தமான மோகமும் அதிகமாக உள்ளது. ஆதி ரத்தினங்கள் சரியாக இருப்பதால் மற்றவர்களுக்கும் சரியாக இருக்கின்றார்கள் என்பதை அனைவரும் பார்க்கின்றார் கள். ஆகையால்

உங்களிடம் அவர்களின் மோகம் அதிகமாக உள்ளது. பாப்தாதாவிற்கு இந்த இரண்டு தாதிகள் (சந்திரமணி தாதி, ரத்தன் மோகனி தாதி) பார்க்கும்போது அதிகமான மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஞான சரோவரை பொறுப்பாக இருந்து பாலனை செய்கின்றார்கள். பொறுப்பு என்றால் விளையாட்டு தானே! கடினமாக உள்ளதா என்ன? விளையாட்டு என்பது மிகவும் லேசாக ஆக்கக்கூடியது. அப்படியானால் பொறுப்பு என்னவாக இருக்கின்றது? சரியான நேரத்தில் சகயோகியாக ஆனதால் பாப்தாதாவிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. மேலும் ஆதி யிலும் சகயோகியாகவே இருந்தீர்கள். ஆதியில் இருந்தே சரி என்று சொல்லக்கூடியவர் களாகவே இருந்தீர்கள். இது சாகார பாபாவிடமிருந்து உங்கள் அனைவருக்கும் கிடைத்த வரதானம் ஆகும். பிரம்மா பாபாவிற்கு முடியாது என்ற வார்த்தை நன்றாக இருப்பதில்லை. இது உங்கள் அனைவருக்கும் தெரியும், மேலும் அனுபவமும் உள்ளது.

இஷு தாதி: ஆரம்பம் முதல் இப்போது வரை இவர் மிகச் சிறப்பாக பாகத்தை செய்துள்ளார். உங்களுக்கு (தாதிக்கு) ஒரு சிறப்பான சகயோகியாவர். எந்த ஒரு விசயத்தையும் கேட்பதிலும் கூறுவதிலும் அவர் மிகவும் திறமையானவர், ஏனென்றால் இவரிடம் கம்பீரம் உள்ளது. இந்த கம்பீரம் என்ற குணம் முன்னேறச் செய்கின்றது. ஏதோ விசயத்தை கூறியாகி விட்டது என்றால் நல்லது. கூறியாகிவிட்டது எனில் பாதி முடிந்துவிடடது, பாதி பழம் பழுத்து விட்டது, பாதி சேமிப்பாகிவிடடது. ஆனால் கம்பீரம், என்பதில் முழு பலனும் சேமிப்பாகிவிடும். பாருங்கள் ஜெகதாம்பா எத்தனை கம்பீரமாக இருந்தார், சேவையில் ஸ்துலத்தில் மற்றவர்களை விட குறைவான சேவை செய்தாலும், மற்றவர்கள் அதிகம் செய்தாலும், இந்த கம்பீரம் என்ற குணத்தின் முலம் முழு கணக்கும் சேமிப்பு செய்துவிடடார்கள். குறைவு ஏற்படவில்லை.

சிலர் அதிகமாக செய்கிறார்கள், ஆனால் அது பாதி அல்லது கால் பகுதி குறைந்து விடுகின்றது. செய்கின்றார்கள், ஏதேனும் விசயம் என்றால் முழுவதுமாக துண்டிக்கப் பட்டுவிடுகின்றது அல்லது சிறிய பிரச்சினை என்றால் கால் பங்கு குறைந்துவிடுகின்றது. இப்படி அதை வர்ணனை செய்தால் பாதியாக குறைந்துவிடும். என்ன மிச்சம் இருக்கும்? ஆக, ஜெகதாம்பாவின் ஸ்பெஷாலிட்டி - சேமிப்பு கணக்கு அதிகம், கம்பீரமான தேவி. அதே போல, அனைவரும் கம்பீரமாக இருக்கவேண்டும். மதுபானில் வசித்தாலும் சரி, சேவை மையங்களில் இருந்தாலும் சரி, மற்றவர்கள் அனைவரும் கம்பீரமாக தனது மதிப்பெண்களை தீவிரமாக சேகரிக்க பாப்தாதா கூறுகின்றார். ஆனால் அதை வர்ணனை செய்தால் அழிந்துவிடும். அது நல்லதாக இருந்தாலும் சரி, கெட்டதாக இருந்தாலும் சரி. நல்லது நமது அபிமானம் மற்றும் தீயவை என்பது அவமானத்தை செய்விக்கும். எனவே அனைவரும் கம்பீரமான தேவியாக ஆகி, கம்பீரத்தின் தன்மையை காட்டுங்கள். கம்பிர தேவியாக தென்படவேண்டும். இப்போது கம்பீரம் மிக மிக அவசியமாகும். இப்பொழுது பேசும் பழக்கம் அதிகமாகிவிடடது. எனவே என்ன வருகின்றதோ அதை எல்லாம் பேசுகின்றனர். ஆனால் எவ்வளவு பிரபாவம் கம்பீரத்தன்மைக்கு இருக்குமோ அவ்வளவு வார்த்தையில் பிரபாவம் இருக்காது . நல்லது.

வரதானம் : ஆன்மிக ரோஜாவாகி ஆன்மீகத்தின் நறுமணத்தை எங்கும் பரப்பக்கூடிய ஆகர்சண மூர்த்தியாக ஆகுக

சதா நாம் பகவானின் தோட்டத்தின் ஆன்மீக ரோஜாக்கள் என்பதை

நினைவில் கொள்ளுங்கள். ஆன்மீக ரோஜா என்றால் ஆன்மீகத்தில் இருந்து விலகி இருக்கக்கூடாது. பூக்களில் நறுமணம் அடங்கியிருப்பது போல, அனைவருக்குள்ளும் ஆன்மீக நறுமணம் தன்னை நோக்கி ஈர்க்கும் வகையில் ஆன்மீகத்தின் நறுமணம் இருக்கவேண்டும் - தானாக நாற்புறமும் பரவவேண்டும் மற்றும் அனைவரையும் தன்பக்கம் கவர்ச்சி செய்து கொண்டேயிருக்க வேண்டும். எப்பொழுது நீங்கள் அப்படிப்பட்ட நறுமணம் மற்றும் கவர்ச்சிக் கும் மூர்த்தியாக ஆவீர்களோ அப்பொழுது உங்களின் நினைவுச்சின்னத்தின் முன் அகர்பத்தி போன்றவற்றால் நறுமணத்தை ஏற்படுத்துவார்கள்.

சுலோகன்: ஸ்லோகன்:- சுயமாற்றத்தின் மூலம் உலக மாற்றத்திற்கான கருவியாக இருப்பவர்களே பரோபகாரிகள்.